தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, ஆடி 3, திருவள்ளுவர் ஆண்டு–2048

2017 ஜூலை 19, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.”

பொருள் வரும் வழிகளை உண்டாக்குதல், பெற்ற பொருள்களைச் சேர்த்தல், சேர்த்தவற்றைக் காத்தல், பகிர்ந்து கொடுத்தல் ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்வதே உயர்ந்த அரசாகும்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. தகவல் கோரல்

(அ) கொளத்தூர் தொகுதி, துணை மின் நிலையங்கள் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில், விரிவாக்க பகுதிகளுக்குட்பட்ட 40–க்கும் மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கிய தொகுதியாக அமைந்திருக்கிறது. அந்தப் பகுதிகளுக்குச் சீரான மின்சாரம் தடையில்லாமல் கிடைக்கச் செய்வதற்காக, 2007 ஆம் ஆண்டு,*

64—வது வட்டம், நேர்மை நகரிலுள்ள அருள்மிகு சோமசுந்தரசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் 9,600 சதுர அடி நிலப் பரப்பில் 33/11 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைத்திட வேண்டி கருத்துரு பெறப்பட்டு இருக்கிறது. பிறகு, அந்த நிலத்தின்மீது வழக்குகள் நடைபெற்றன; அந்த வழக்குகள் 2015 ஆம் ஆண்டு முடிவுற்றிருக்கின்றன. அந்த நிலத்திற்குரிய 40 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாயை செலுத்திய பிறகும், நேர்மை நகர் பகுதியில் இன்னும் 33/11 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணி துவங்கப்படவில்லை.

அதேபோல, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, 65—வது வார்டு, கணேஷ் நகரில் 2009 ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்ட 110/11 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க, 7.54 ஏக்கர் பரப்பளவுக் கொண்ட மனையை மின்சார வாரியத்திற்குத் தருவது என்றும், ரூ.5,43,15,144/—ஐ கட்ட வலியுறுத்தியும், வெளியிடப்பட்ட வருவாய்த் துறை ஆணை, 341, நாள் 2—8—2014 அன்றைய வருவாய்த் துறை செயலாளர் அவர்களால் மின்சாரத் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு இருக்கிறது. இதுகுறித்து அந்த தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையில், நானும் 12—7—2016 அன்று மின்சார வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில்கூட 10—க்கும் மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பகுதிகளில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகள் பல ஆண்டுகளாகியும் இன்னும் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று கூறினார்கள். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, ஜூன் மாதம் 29 ஆம் தேதி, விதி 110—ன்கீழ் அறிக்கை அளித்த நேரத்தில், 108 துணை மின் நிலையங்கள் 1,347 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்ற உறுதியை இதே அவையில் தந்திருக்கிறார்கள். ஆக, அந்த அறிவிப்புகளெல்லாம் செயல்பாட்டிற்கு வரவேண்டுமென்றால், எந்தெந்தப் பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கின்றீர்களோ, அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த மேற்பார்வைப் பொறியாளர் பொறுப்பிலிருக்கின்ற ஒருவருக்கு,

ஒரு கால அளவை நிர்ணயம் செய்து, அதற்குரிய பொறுப்பை வழங்க வேண்டும். அப்போதுதான், இந்த துணை மின் நிலையங்கள் அறிவிப்போடு நின்றுவிடாமல், மக்களுடைய பயன்பாட்டிற்கு வருகின்ற சூழல் ஏற்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவர் தொகுதியினுடைய பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அவற்றில், கணேஷ் நகரைப் பொறுத்தவரையில், T.S. No. 21, பிளாக் 2–ல், 1,682 சதுர மீட்டர் அளவிலான நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. தற்போது, 230/33 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துருவும் வழங்கப்பட்டு, கிட்டத்தட்ட ஒரு மாத காலத்திற்குள் அந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கொளத்தூர் கிராமத்திலுள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தைப் பற்றிக் கூறினார்கள். 894 சதுர மீட்டர் கொண்ட, அந்த இடத்தையும் கையகப்படுத்துகின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "2015 ஆம் ஆண்டே வழக்குகள் முடிந்துவிட்டன; அந்தப் பணிகளை எடுத்து துவங்குவதற்கு இன்னும் காலதாமதம் ஆகின்றது. அதை வேகப்படுத்த வேண்டும்" என்று கேட்டிருக்கின்றார்கள். பொதுவாக, அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தைக் கையகப்படுத்தும்போது பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றன. ஏற்கெனவே அந்த இடத்தில் ஆக்கிரமிப்புகள் இருக்கின்றபட்சத்தில், அதை அகற்றும்போது பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றன; காலதாமதங்கள் ஏற்படுவதற்கு அதுதான் காரணம். எனினும், விரைந்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

முற்பகல் 10–05

மேலும், அயனாவரம், ராஜாஜிநகர், திரு.வி.க. நகர், இலட்சுமிபுரம் போன்ற பகுதிகளிலும் துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்கெனவே அம்மா அவர்கள் இருந்தபோது கொளத்தூர் தொகுதியில் மின் கம்பிகளை புதைவடக் கம்பியாக மாற்ற வேண்டுமென்று கேட்டார்கள். கிட்டதட்ட 12.5 கிலோ மீட்டர் அளவிற்கு இப்போது பணிகள் நடைபெற்றிருக்கின்றன. கொளத்தூர் பகுதியில் அமைக்கவிருக்கின்ற 230 கே.வி.ஏ. துணை மின் நிலையத்திற்கு 1,652 சதுர மீட்டர் அளவிற்கு அனாதீன இடம் எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் அல்லவா?*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *அந்த இடம் திறந்தவெளியாக இருந்த காரணத்தால் வாகனங்கள் நிறுத்தப் பயன்படுத்தப்பட்டது. அவற்றை அப்புறப்படுத்த வேண்டிய பணி இப்போது நடைபெற்று, 'மின்சார வாரியத்திற்குச் சொந்தமான இடம், வாகனங்கள் நிறுத்தக்கூடாது' என்ற* board *வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன அந்தப் பணிகளெல்லாம் இன்னும் 2 மாத காலத்திற்குள் ஆரம்பிக்கப்படும்.*

மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவித்தது 108 என்று சொன்னார்கள். ஆனால் மொத்தம் அறிவித்தது 129 துணை மின் நிலையங்கள். அன்றைக்கே நான் பேசும்போது சொன்னேன். இதுவரை இல்லாத அளவிற்கு ஓர் ஆண்டில் 129 துணை மின் நிலையங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக இந்தப் பணிகளையெல்லாம் ஆரம்பிக்க வேண்டுமென்றால் நிலம் கிடைப்பதில்தான் இருக்கிறது. ஒருசில இடங்களில் நிலம் கிடைப்பதில் பிரச்சினை இருக்கிறது. எங்கெல்லாம் இடம் இருக்கின்றதோ அங்கெல்லாம் பிரச்சினையில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன 3 பகுதிகளிலும் இப்போது பிரச்சினையில்லை. உடனடியாக அங்கு பணிகள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. டெண்டர் மற்றும் பிற நடைமுறைகள் இருக்கின்ற

காரணத்தினால்தான் காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. இருந்தாலும் போர்க்கால அடிப்படையில் இந்தப் பணிகளைச் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கின்றது. இந்த ஆண்டே இடம் கிடைத்தது என்று சொன்னால் 129 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதேநேரத்தில் LT மற்றும் HT Lines–ஐ புதைவடக் கம்பிகளாக அமைப்பதைப் பற்றி ஏற்கெனவே இதே அவையிலே நீங்கள் ஓர் உறுதிமொழி தந்திருக்கிறீர்கள். ஆனால் போதிய அளவிலே pillar box இல்லாதது; 240 mm square cable இல்லாதது போன்ற காரணங்களால்தான் அந்தப் பணிகளெல்லாம் தடைபட்டுப்போயிருக்கின்றன என்ற ஒரு செய்தி எனக்கு வந்திருக்கிறது. எனவே இதுகுறித்தும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கின்ற கொளத்தூர் பகுதியில் மட்டும் H.T. line 40 கிலோ மீட்டர் இருக்கிறது. L.T. line 1,615 கிலோ மீட்டர் இருக்கின்றது. அந்த ஒரு தொகுதிக்கு மட்டும் கிட்டதட்ட 242 கோடி ரூபாய் அளவிற்கு estimate போடப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது உண்மைதான். Tender போடுகின்றபோது, D.P.R. போடுகின்றபோது அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்குச் சென்றுவிடுகின்றனர். இப்போது transformer–ம் வாங்க முடியாமல் இருக்கிறது. எனவேதான் ஒருசில இடங்களில் பிரச்சினை இருக்கிறது. இருந்தாலும் கூடியவிரைவில் அவற்றை முடித்து அந்தப் பணிகள் தொடங்கப்படும். இப்போது அங்கு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 12.5 கிலோ மீட்டர்

அளவிற்கு நான் ஏற்கெனவே சொன்னதுபோல பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. சென்னையின் விரிவாக்கப்பட்ட பகுதிகளைப் பொறுத்தவரையில் H.T. Line 2,500 கிலோ மீட்டர் இருக்கிறது. L.T. Line பொறுத்தவரையில் 33,307 கிலோ மீட்டர் இருக்கிறது. அதற்காகத்தான் மத்திய அரசிடம் பேசி 2,567 கோடி ரூபாய் நிதியை நாங்கள் பெற்றிருக்கிறோம். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல முன்னுரிமை அடிப்படையில் கொளத்தூர் பகுதியைத்தான் இப்போது எடுத்திருக்கிறோம். அந்தப் பகுதியில் பணிகளை முடித்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வேகமாகச் செயல்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று கூட்டத்தொடரினுடைய நிறைவு நாள். இன்றைக்குக் கேள்வி நேரம் இல்லை என்று ஏற்கெனவே நாம் முடிவு செய்திருக்கிறோம். இருந்தாலும் நிறைய உறுப்பினர்கள் என்னிடத்திலே வந்து, ‘கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம், அவற்றையெல்லாம் நாங்கள் ஒரு முறை பதிவு செய்ய வேண்டும்’ என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் முறையாக கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுக்கவில்லை. உறுப்பினர்கள் எப்படியெல்லாம் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள் என்று கேட்டால், வினாக்கள் கேட்பதைப் போன்று கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். கவன ஈர்ப்பு அறிவிப்பு எப்படி கொடுக்க வேண்டுமென்றால், சமீபத்தில் அதாவது, 2 நாட்களுக்குள்ளாக தொகுதியிலே நடந்த ஒரு பிரச்சினையையோ, பொதுமக்களுடைய முக்கியமான பிரச்சினையையோ கவன ஈர்ப்பு அறிவிப்பாக, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பாகக் கொடுத்தால் அதை மாண்புமிகு அமைச்சர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம். ஆனால், நீங்கள் கொடுத்துள்ள எல்லாவற்றையும் பார்த்தீர்களென்றால் ஏறக்குறைய வினாக்களாக இருக்கின்றன; இல்லையென்றால் தொகுதிக் கோரிக்கையாக இருக்கிறது. இதைத்தான் கொடுத்திருக்கிறீர்கள்.

இருந்தாலும் பரவாயில்லை, நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள், இன்றைக்கு நிறைவு நாளாக இருக்கின்ற காரணத்தினாலே கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்தவர்களுக்கு நான் அனுமதியளிக்கிறேன். என்ன கொடுத்திருக்கிறீர்கள் என்ற விவரத்தை மட்டும் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். விளக்கமாகப் பேசுவதற்கு

2017 ஜூலை 19] [பேரவைத் தலைவர்]

நேரம் இல்லை. ஏனென்றால் நிறைய உறுப்பினர்களைப் பேச அனுமதிக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ஆகவே, நீங்கள் எவ்வளவு தூரம் இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறீர்களோ அவ்வளவு தூரம் நான் அனுமதிப்பேன். மேலும், மாண்புமிகு அமைச்சர்கள் அதற்கு பதில் சொன்னால் அதிக நேரமாகும். அதனால் உறுப்பினர்கள் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். கவன ஈர்ப்பு அறிவிப்பாகக் கொடுத்ததை நான் ஏற்கெனவே அனுப்பிவைத்திருக்கிறேன். அதையே நீங்கள் எடுத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம். இல்லையென்றாலும், இப்போது அவர்கள் பதிவு செய்வதையும் நான் அனுப்பிவைக்கின்றேன். அவற்றை மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அவர்களது நடவடிக்கைக்கு உட்படுத்திக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) சென்னை, யானை கவுனி பாலப் பணிகளை விரைவுபடுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர் பாபு அவர்கள். ஒரு நிமிடத்தில் முடிக்க வேண்டும். மற்ற உறுப்பினர்களுக்கும் வாய்ப்புத் தர வேண்டும். மற்ற நேரம் மாதிரி இன்றைக்கு இல்லை.*

முற்பகல் 10–10

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நயினார் பாலம் என்று அழைக்கப்படுகின்ற யானைக் கவுனி பாலம் கடந்த ஆண்டு 27–12–2016 அன்று மூடப்பட்டது. அந்தப் பாலத்தின் விரிவாக்கத் திட்ட அறிக்கைக்கூட இரயில்வே துறையால் இதுவரையில் செயல்படுத்தப்படவில்லை. கடந்த 27–6–2017 அன்று மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் இரயில்வே துறைக்கு இந்தப் பாலத்திற்குண்டான முழுத் தொகையையும் மாநகராட்சியே ஏற்றுக்கொள்ளும் என்று ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கின்றார். ஏற்கெனவே உள்ள நடைமுறையின்படி, இரயில்வே* portion *போக மீதி இருக்கின்ற இடங்களுக்கு மாநகராட்சித்தான் பணத்தைச் செலுத்தும். 50:50 சதவிகிதம் என்ற அளவிலே அதைப் பங்கு பிரிப்பார்கள். ஆனால், இந்த முறை அந்தப் பாலம் மூடப்பட்டு ஏற்கெனவே எட்டு மாதங்களாகியிருக்கின்றன. அதன் சுற்றுப்புறத்தில் இருக்கின்ற அனைத்துப் பகுதிகளிலும் போக்குவரத்து மூச்சுவிட முடியாத அளவிற்கு நெருக்கடியை*